### நசுக்கப்படும் நாடாளுமன்ற ஜனநாயகம்!

# பெரியாரின் கருத்துகளின் மீது பா.ஜ.க. வினர் ஆத்திரம்!

## தீக்கதிர் நாளேடு தலையங்கம்!

சென்னை, டிச. 14-

நாடாளுமன்றத்தில் மாநில உரிமைகள் தொடர்பாக தந்தை பெரியாரின் கருத்துக் களை மேற்கோள் காட்டிய போதுபா.ஜ.க.வினர்ஆத்திரம டைந்தனர் என 'தீக்கதிர்' நாளேடுநசுக்கப்படும்நாடாளு மன்றஜனநாயகம்என்றதலைப் பில்13.12.2023-ல்தலையங்கம் வெளியிட்டுள்ளது.

அது வருமாறு:

நாடாளுமன்றத்தில் அம் பானி- அதானி குறித்து கேள்வி எழுப்பிய காரணத்திற்காக திரி ணாமுல்காங்கிரஸ்உறுப்பினர் மஹுவா மொய்த்ரா எம்.பி., பதவியிலிருந்து நீக்கப்பட்டு ள் ளார். நாடாளுமன்ற நெறிமு றைக் குழு விசாரணையின் போதுதம்மீதானகுற்றச்சாட்டு களை அவர் மறுத்தபோதும், அந்தக்குழுவில் இடம் பெற் றுள்ள எதிர்க்கட்சி உறுப்பினர் கள் பதவி நீக்கத்தை எதிர்த்த நிலையிலும் மக்களவையில் கொண்டுவரப்பட்டதீர்மானத் தின் அடிப்படை யில் அவரது பதவி பறிக்கப் பட்டுள்ளது.





இதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் அவர் வழக்கு தொடுத்துள்ளார். காங்கிரஸ் தலைவ ரான ராகுல்காந்தி யின் எம்.பி., பதவி நீதிமன்ற தீர்ப்பைக் காரணம் காட்டி பறிக்கப்பட் டது. பின்னர் உச்சநீதிமன்றத் தின் தலையீடு காரணமாக அவர் நாடாளுமன்றத்திற்கு மீண்டும் வர முடிந்தது.

நாடாளுமன்ற ஜனநாயகத் தின் மீது நம்பிக் கையில்லாத ஆர்எஸ்எஸ் அமைப்பின் அரசி யல் முகமான பாஜக, நாடாளு மன்ற ஜனநாய கத்தை கொஞ் சம் கொஞ்சமாக அழித்து வரு கிறது. இதே நாடாளுமன்றத் தில் பாஜக உறுப்பி னரான ரமேஷ் பிதூரி சக நாடாளு மன்றஉறுப்பினரானடேனிஷ் அலியை மதரீதியாக இழிவு படுத்தும் வகை யில் அருவருக்கத் தக்க வார்த்தை களை பயன்ப டுத்தினார்.

ரமேஷ் பிதூ ரியை அவையிலி ருந்து இடை நீக் கம் செய்யக்கூட தயாராகஇல்லை. அவர்மன்னிப்புக் கேட்க மறுத் தபோதும், அவர் மீது நடவ டிக்கை எடுக்கப்படவில்லை. பின்னர் அவர் வருத்தம் தெரி வித்துவிட்டதாகக் கூறி பிரச்ச னையை முடித்துவிட்டனர்.

நாடாளுமன்ற மாநிலங்கள வையில்ஜம்மு-காஷ்மீர்தொகு திகள் மறு வரையறை தொடர் பான மசோதா மீது பேசிய தி.மு.க. உறுப்பினர் எம்.எம். அப் துல்லா, ஜம்மு-காஷ்மீர்மாநில சிறப்பு அந்தஸ்து ரத்து என்பது கூட்டாட்சி மீதான தாக்குதல் என்று குறிப்பிட்டிருக்கிறார். அத்துடன் மாநில உரிமைகள் தொடர்பாக தந்தை பெரியா ரின் கருத்துக்களை மேற்கோள் காட்டியபோது பாஜகவினர் ஆத்திரமடைந்துள்ளனர்.

பெரியாரின் கருத்துக்களை மட்டுமல்ல, பெரியார் என்ற பெயரும் அவைக்குறிப்பிலி ருந்துநீக்கப்படுவதாகமாநிலங் களவைத் தலைவர் ஜகதீப் தன் கர் அறிவித்துள்ளார். ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திற்கான சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப் பட்டது குறித்து உச்சநீதிமன் றம் தீர்ப்பளித்துவிட்டதால் அதுகுறித்து பேசவே கூடாது என ஒன்றிய உள்துறை அமைச் சர் அமித்ஷா மிரட்டியுள்ளார். ஆனால் நீதிமன்றத் தீர்ப்பை நாடாளுமன்றம் நினைத்தால் மாற்றி அமைக்க முடியும். தங்க ளுக்கு ஏற்பில்லாத நீதிமன்றத் தீர்ப்புகளை பலமுறை ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி புறக்கணித்திரு க்கிறது. நாடாளுமன்றஜனநாய கத்தையும், பாஜக ஆட்சி அழித்து வருகிறது.

இவ்வாறு அத்தலையங்கத் தில் கூறப்பட்டுள்ளது.

### சோதனைக் குழாய் மருத்துவ முறைகளில்

# விலையேற்றத்தைத் தடுக்க, ஒன்றிய அரசின் முன்முயற்சிகள் என்னென்ன?

## மக்களவையில் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் எம். பி. கேள்வி!

புதுடெல்லி, டிச. 14-

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளு மன்ற உறுப்பினர், டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன்08.12.2023 அன்று மக்களவையில், சோத னைக் குழாய் மருத்துவ முறை களில், தொழில் நுட்பத்தை பயன்படுத்துவதன் மூலம், விலையேற்றத்தை தடுத்து, பொதுமக்களுக்கு பயனளிக் கும் வகையில் ஒன்றிய அரசின் நடவடிக்கைகள்என்னென்ன? என்றும், அதன் விவரங்களை உறுப்பினர்களிடம் பகிர்ந்து கொள்ள இயலுமா? என்றும் ஒன்றியஅரசின்சுகாதாரத்துறை இணையமைச்சர், டாக்டர் பாரதி பிரவீன் பவாரிடம் கேள்வி எழுப்பினார்.

ஒன்றிய அதற்கு இணைய மைச்சர்பாரதிபிரவீன்அளித்த பதில் பின்வருமாறு:

தேசிய சுகாதாரத் திட்டம், ஆயுஷ்மான் பாரத் சுகாதார மையங்கள் இவற்றின் மூலம், இந்தியமருத்துவஆராய்ச்சிகழ கம், இந்தியாவிலேயே தயாரிக் கப்படும் மருத்துவ தொழில் நுட்ப முறைகளில் ஆராய்ச் சியை மேற்கொண்டுவருகிறது என்றும், மருத்துவ உபகரணங் கள் நோய் கண்டறிதல் முறை கள், இவற்றில் தொழில்வட்டத் தின் உதவியால், விலை குறைப்பை உறுதி செய்தல், அனைவருக்கும்மருத்துவவசதி கிடைக்கச் செய்தல் என்று பல் வேறு முயற்சிகளை எடுத்து மருத்துவர்களுக்கும், மருத்துவ மனைகளுக்கும் இந்திய மருத் துவ ஆராய்ச்சி கழகம் சேவை செய்து வருகிறது.



இந்திய தொழில்நுட்ப கழ கங்களும், மருத்துவ நிறுவனங் களும் இணைந்து அதிக திறன் வாய்ந்த பொலிவுறு மையங் களை உருவாக்கியுள்ளன என் றும், அதன் மூலம் ஆராய்ச்சி களை முன்னெடுத்து பொதுமக்களுக்கு குறைந்த செலவில் மருத்து உபகரணங்க ளும், நோய்கண்டறியும்முறை களும் கிடைக்க வாய்ப்புகள், ஏற்படுத்தபட்டுவருகிறது இவ் வாறு ஒன்றிய இணையமைச் சர், டாக்டர் பாரதி பிரவீன் பவார் பதிலளித்தார்.

### 2015 வெள்ளத்தை விட - இப்போது

# மீட்பு பணிகள் சூப்பர்! ஒன்றிய குழுவினர் சான்றிதழ்!

## 'தினகரன்' தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, டிச. 14-

மழை வெள்ளப் பாதிப்புக ளில் இருந்து மக்கள் விரைவில் மீண்டு வர தமிழ்நாடு அரசு எடுத்த மீட்பு பணிகள் சூப்பர் என ஒன்றிய குழுவினர் பாராட்டு சான்றிதழ் கொடுத் துள்ளனர் என 'தினகரன்' நாளேடு 13.12.2023 அன்று தலையங்கத்தில்குறிப்பிட்டுள் ளது.

அது வருமாறு:

மிக்ஜாம்புயலால்பாதிக்கப் பட்ட சென்னை உள்ளிட்ட 4 மாவட்டங்களில் தமிழ்நாடு அரசு மேற்கொண்ட பணிகள் பாராட்டுக்குரியவை. மழை, வெள்ளபாதிப்புகளில்இருந்து மக்கள் விரைவில் மீண்டு வர தமிழ்நாடு அரசு உரிய நடவ டிக்கைஎடுத்துஇருக்கிறது. அது வும் 2015 வெள்ளத்தை விட இப்போது மீட்பு பணிகள் சூப் பர் என்று ஒன்றிய குழுவினர் பாராட்டு சான்றிதழ் கொடுத்து இருக்கிறார்கள். இதுதான்தமிழ் நாடு அரசு பேரிடர் நேரத்தில் மேற்கொண்ட பணிக்கு கிடைத்தநற்சான்றிதழ். இதுநிச் சயம் பெருமைமிகு தருணம்.

அதிமுக, பா.ஜ உள்ளிட்ட தமிழ்நாட்டு எதிர்க்கட்சிகள் இந்த பேரிடர் நேரத்தில் தமிழ் நாடு அரசோடு ஒத்துழைத்து மக்கள் பணியாற்றி இருக்க வேண்டும். களத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட அமைச்சர்கள், தமிழ்நாடு அரசு அதிகாரிகள் தொடர்ந்து வெள் ளம்வடியும்வரை, மக்கள்பாது காப்பை உறுதி செய்யும் வரை, அவர்களதுவாழ்வாதாரம்மீண் டும்இயல்புநிலைக்குதிரும்பும் வரை மக்கள் பணியாற்றிக் கொண்டு இருந்தார்கள், மீட்பு பணியை மேற்கொண்டு வந் தார்கள், நிவாரண உதவிகளை வாரி வழங்கினார்கள். அதுவும் பெரு வெள்ளத்தால் பாதிக்கப் பட்டு எரிச்சலடைந்த மக்க ளைக்கூட உரியநிதானத்துடன் கையாண்டு அவர்களுக்கான நலத்திட்டங்களையும் வழங்கி னார்கள் என்றால் மிகையல்ல. அதனால் தான் மிக்ஜாம் புயல் மற்றும் பெரு மழைக்கு பிறகு சென்னை அதிவேகமாக மீண் டெழுந்து இருக்கிறது. இயல்பு நிலைக்கு இவ்வளவு விரைவில் திரும்பியிருக்கிறது. இதை யாராவது மறுக்க முடியுமா?

அதே வேகத்தில் வெள்ளத் தால்பாதிக்கப்பட்ட அத்தனை குடும்பங்களுக்கும் தலா 6 ஆயி ரம் வழங்கப்படும் என்று அறி வித்திருக்கிறார் முதல்வர் மு.க. ஸ்டாலின். இத்தனைசிறப்பாக தமிழ்நாடு அரசு மிக்ஜாம் புயல் தீவிரத்தைகையாண்டதுபோல் அதிமுக, பா.ஜகையாண்ட பேரி டர்கள் என்ன?.

திமுக அரசைப்பார்த்து அவர்கள் எழுப்பும் அதே கேள் விகள் அவர்களை நோக்கியும் எழுப்பப்படும்அல்லவா?. 2015 பெருவெள்ளத்தின்போது அன் றைய முதல்வர் ஜெயலலிதா தலைமையிலான அதிமுக அரசு செய்தது என்ன?. அதனால் ஏற் பட்ட பாதிப்புகள், வடுக்கள் அவ்வளவுஎளிதில்மறையுமா?. அதைவிட முக்கியமாக இன் றைய எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடிபழனிசாமிமிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட மக்க ளுக்குமேற்கொண்டநிவாரண பணிகள் என்னென்ன?. கொரோனாகாலத்தில்ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக் கைகள் தான் என்ன?

திமுக அரசின் பணிகளால் சென்னை இயல்பு நிலைக்கு வெகுவிரைவில் திரும்பியது கண்டு, வெள்ளத்தில் அரசியல் செய்யமுடியாதது எதிர்க்கட்சி களுக்கு வருத்தம். அதனால் தான் புயல் நிவாரணமாக 10 ஆயிரம் கொடுக்க வேண்டும், 12ஆயிரம்கொடுக்கவேண்டும் என்று பேசுகிறார்கள். 201415 முதல்202122வரையில்ஒன்றிய அரசின் நேரடி வரி பகிர்வாக தமிழ்நாடு கொடுத்திருப்பது 5.16 லட்சம் கோடி.

இதே காலகட்டத்தில் வரி பகிர்வாக ஒன்றிய அரசிடம் தமிழ்நாடு பெற்றிருப்பது 2.08 லட்சம் கோடிதான். அப்படி இருக்கும் போது தமிழ்நாடு அரசு கேட்டுள்ள மிக்ஜாம் புயல் நிவாரண நிதியாக 5 ஆயி ரம் கோடியை ஒதுக்குவதில் ஒன்றிய அரசுக்கு என்ன தயக் கம்?

இவ்வாறு அதில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

### எழும்பூர் தொகுதி, 78வது வட்டம்: பரந்தாமன், எம்.எல்.ஏ., ஏற்பாடு!

# 1,000 குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள்!

## கழகத் தலைமை நிலையச் செயலாளர் பூச்சி எஸ்.முருகன் வழங்கினார்!

சென்னை, டிச. 14-

எழும்பூர் தொகுதி, 78வது வட்டத்தைச் சேர்ந்த 1,000 குடும்பங்களுக்கு எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் வழக் கறிஞர் இ.பரந்தாமன் ஏற் பாட்டில், தமிழ்நாடு வீட்டு வசதிவாரியத்தலைவரும்கழ கத் தலைமை நிலையச் செய லாளருமான பூச்சி எஸ்.முரு கன் நிவாரண உதவிகளை வழங்கினார்.

மிக்ஜாம் புயலால் பாதிக் கப்பட்ட பகுதிகளில் அமைச் சர்கள், எம்.எல்.ஏ.க்கள்நேரில் சென்றுமீட்புநிவாரணநடவ டிக்கைகளில் ஈடுபட வேண்டும்என்றமுதலமைச்சர் அவர்களின்அறிவுறுத்தலுக்கு இணங்க, எழும்பூர்சட்டமன் றத் தொகுதி உறுப்பினரும் தி.மு.கழகச் சட்டத்துறை இணைச் செயலாளருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் ஒன்பதாவது நாளாக, எழும் பூர் தொகுதிக்குட்பட்ட 78 வது வட்டத்திலுள்ள அஷ்ட புஜம் சாலை, முருகேசன் தெரு, ரங்கையாதெரு, நரசிங் கப்பெருமாள்கோவில்தெரு, குட்டி தெரு, சித்தலு தெரு, மதுரை தெரு, நம்மாழ்வார் தெரு, அஷ்டபுஜம் முதல் லேன், மாணிக்கம் தெரு, ராகவா தெரு, கொசப் பேட்டை குடிசைப் பகுதி, டி.கே.தெரு, ஆண்டியப்பன் தெரு, ஆலத்தூர் சுப்பிரமணியம் தெரு, ஆரி முத்து தெரு, சட்டண்ணன் தெரு, சி.கே.பி. கோவில் தெரு, சி.கே.பி. சந்து, வீ.வீ. கோவில்தெரு, வீ.வீ.கோயில் சந்து, கோவிந்தன் தெரு, சுப்பாதெரு, குறவன்குளம்1, 2 மற்றும் 3வது சந்து, காஞ்சிபு ரம் முனுசாமி தெரு, அனந்த கிருஷ்ணன்தெரு, அங்காளம் மன் கோவில் தெரு ஆகிய தெருக்களைச்சேர்ந்த பொது மக்களுக்கு, அவரது ஏற்பாட் டில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவரும் கழகத் தலைமைநிலையச்செயலாள ருமான பூச்சி எஸ்.முருகன் 1,000 பெட்ஷீட், 1,000 புடவை, தலா 5 கிலோ கொண்ட 1,000 அரிசிப் பை, 1,000 கெல்லாக்ஸ் பாக்கெட் மற்றும் 1,000 சத்துணவு பானம் ஆகிய நிவாரணப் பொருட்களை வழங்கினார்.

இந்நிகழ்விற்கு 78 (அ) வட்ட முன்னாள்செயலாளர் ஆர்.புருஷோத்தமன் முன் னிலை வகித்தார்.

ஜெ.விஜயகுமார், ந.கலை யரசன், புரசை எஸ்.குமார், வெ.மருதன், மா.காந்தி, மு.கமலக்க ண்ணன், யு.விஜ யபோஸ், கே.சீனிவாசன், ரா.வெற்றிவேல், சிலம்பரசன், சதிஷ்குமார், எல்.சுகுமாரன், எழும்பூர் சி. ரமேஷ், இரா. தாமோதரன், சி.குணசேகரன், ப.பன்னீர் செல்வம், சூளை நேரு, பி.குப்பன், எல்.நரேஷ் குமார், நேரு பிரபாகரன், கோமகன், எம்.இருமையகு மார், எம்.சீனிவாசன், பி. கான், ரத்தினம், கவிதா, ரோஸி, விஜய தேவராஜ், சி.இ.ஜெய்சங்கர், மனோக ரன், பிரேம்குமார், மகேஷ்கு மார், கே.பி.பார்க் சத்திஸ், நாகலிங்கம், ஜெகன், ப. கோவிந்தராஜ், நாகராஜ், புஷ் பலதாஉள்ளிட்டகழகநிர்வா கிகளும் முன்னோடி களும் கலந்துகொண்டனர்.



எழும்பூர் தொகுதி, 78வது வட்டத்தைச் சேர்ந்த 1,000 குடும்பங்களுக்கு எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் இ.பரந்தாமன் ஏற்பாட்டில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவரும் கழகத் தலைமை நிலையச் செயலாளரு மான பூச்சி எஸ்.முருகன் நிவாரண உதவிகளை வழங்கினார். இந்நிகழ்விற்கு 78 (அ) வட்ட முன்னாள் செயலாளர் ஆர்.புருஷோத்தமன் முன்னிலை வகித்தார். எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ.விஜயகுமார், முன்னாள் பகுதிப் பொருளாளர் ந.கலையரசன், முன்னாள் மாவட்டப் பிரதிநிதி புரசை எஸ்.குமார், அவைத் தலை வர் வெ.மருதன், மாவட்டப் பிரதிநிதிகள் மா.காந்தி, மு.கமலக்கண்ணன், மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் யு.விஜயபோஸ் உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்றனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.12.2023) தலைமைச் செயலகத்தில், நாகூர் தர்கா பெரிய ஆண்டவர் கந்தூரி சந்தனக்கூடு திருவிழாவிற்கு தமிழ்நாடு அரசு 45 கிலோ சந்தனக்கட்டைகளை கட்டணமின்றி வழங்குவதற்கான அரசாணையினை நாகூர் தர்கா பரம்பரை அறங்காவலர் அல்ஹாஜ் செய்யது காமில் சாஹிப், தலைமை நிருவாக அறங்காவலர் செய்யது முகமது காஜி ஹுசைன் சாஹிப் மற்றும் நாகூர் தர்கா ஆலோசனைக் குழு தலைவர் செய்யது முஹம்மது கலீபா சாஹிப் ஆகியோரிடம் வழங்கினார். இந்நிகழ்வில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், வனத்துறை அமைச்சர் டாக்டர். மா.மதிவேந்தன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாஹு, தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் ந.கௌதமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வடசென்னையில் பாதிக்கப்பட்ட 15,000 குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார்.

சென்னை, டிச. 14 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்த ரவின்படி, நேற்று (13.12.2023) இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு திரு.வி.க. நகர், துறைமுகம், எழும்பூர்மற்றும்வில்லிவாக்கம் சட்டமன்ற தொகுதிகளில் மிக் ஜாம் புயல் மற்றும் கனமழை யால் பாதிக்கப்பட்ட 15,000 குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்கள் மற்றும் உதவித் தொகையினை வழங்கினார்.

மிக்ஜாம் புயல் மற்றும் கன மழையால் பாதிக்கப்பட்ட பெருநகர சென்னை மாநக ராட்சி பகுதிகளில் உணவு மற் றும் நிவாரண உதவிகள் வழங் குதல், நோய்தொற்றுபரவாமல் தடுக்க மருத்துவ முகாம்கள் அமைத்தல் போன்ற பணிகள் துரிதமாக மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. அந்த வகை யில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று (13.12.2023) திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஓட்டேரி, செல்லப்பாதெரு, பிரிசில்நகர், பெரம்பூர்ஜமாலியா ஆகியபகு திகளில் 3,000 குடும்பங்களு க் கும், வில்லிவாக்கம்சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நியூஆவடி சாலை, அயனாவரம் கே.கே. நகர் ஆகிய பகுதிகளில் 2,000 குடும்பங்களுக்கும்நிவாரணப் பொருட்கள் மற்றும் உதவித் தொகையினை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, எழும்பூர் சட்டமன்றத் தொகு திக்குட்பட்ட சேத்துப்பட்டு, மங்களா புரம், தனம்மாள் தெரு, பிருந்தாவனம் குறுக்கு தெரு, தாஸ்புரம், மெக்னிக்கல் சாலை, சூளை, அங்காளம்மன் கோயில்தெரு, புளியந்தோப்பு பி.எஸ்.மூர்த்தி நகர், காட்டூர் தட்டான்குளம், வேலாயுதம் தெருசந்திப்புஆகியபகுதிகளில் 7,000குடும்பங்களுக்கும்துறை முகம் சட்டமன்ற தொகுதிக் குட்பட்டயானைகவுனிகல்யா ணபுரம், நகர்புற வாழ்விட மேம்பாட்டுவாரியகுடியிருப்பு ஆகிய பகுதிகளில் வசிக்கும் 3,000 குடும்பங்களுக்கும் நிவா ரணப்பொருட்கள்மற்றும்நிதி யுதவியினை வழங்கினார்.

பின்னர், அமைச்சர் செய்தி யாளர்களிடம் தெரிவித்தது வது,

பெருமழை பெய்து கொண் டிருந்தபோதே களத்தில் கால் பதித்தவர் தமிழ்நாடு முதல மைச்சர் அவர்கள். நிவாரணப் பணிகள் ராணுவ மீட்பு நடவ டிக்கையை போல் போர்க்கால அடிப்படையில் துரிதமாக செயல்பட்டதால் களத்திலே அரசு ஒருபுறம் என்றாலும், எங் களைப்போன்றஅமைச்சர்கள், நாடாளுமன்றஉறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், திரா விட முன்னேற்றக் கழக நிர்வா கிகள் மக்களுக்கு தோளோடு தோள் நின்று பணியாற்றிய தால் இயல்பு வாழ்க்கை இரண்டுநாட்களில்திரும்பியது. இதிலும் அரசியல் செய்ய முடி யவில்லை என்பதற்காக தற் போது பழைய பல்லவியை புது மெட்டில் பாட ஆரம்பித்திருக் கிறார்கள்.

ஸ்ரீரங்கம் திருக்கோயிலில் பக்தர்களுக்கும் அங்கிருந்த ஊழியர்களுக்கும் ஏற்பட்ட பிரச்சனை. இதில் இந்து சமய அறநிலையத்துறையின் பங்கு என்ன இருக்கிறது. அந்த நேரத் தில் அந்த இடத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையில் ஏற் பட்டசம்பவமாகஇருந்தாலும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர் கள் இது குறித்து தீர விசாரித்து, யார்மீதுதவறுகள்இருந்தாலும் சட்ட நடவடிக்கை ஒரு புறம் என்றாலும், இந்தபிரச்சனையில் சுமூகமான தீர்வு காணப்பட வேண்டும் என்று உத்தரவிட்ட தன் அடிப்படையில் நேற்றைய தினமே இந்த பிரச்சனைக்கு சுமூக தீர்வு ஏற்பட்டு விட்டது. குற்றம் பார்ப்பின் சுற்றம் இல்லை. இதுபோன்றஅரசியல் செய்வதற்கு உகந்த இடமாக அவர்கள் இந்து சமய அறநிலை யத்துறையை, திருக்கோயிலை தேர்ந்தெடுப்பதற்கு காரணம் வெள்ளநிவாரணப்பணிகளில் எந்த விதமான குற்றமும் காண முடியாத சூழ்நிலையில் தற் போதுஇந்துசமய அறநிலையத் துறையை வைத்து அரசியல் செய்ய பார்க்கிறார்கள். இந்து சமய அறநிலையத்துறை வர லாற்றில், 1959 ஆம் ஆண்டு உரு வாக்கப்பட்ட இந்த துறையில் வரலாறு காணாத பணிகளை, புரட்சிகளை தமிழ்நாடு முதல மைச்சர் அவர்கள் செய்து வரு வதை எப்படியாவது களங்கம் கற்பிக்கவேண்டும் என்று இது போன்ற எதிர்பாராத சம்பவங் களை அரசின் மீது பழிசுமத்து கின்ற வேலையில் தயவுசெய்து ஈடுபட வேண்டாம். ஆக்கபூர் வமானபணிகளுக்கு அழைத்து செல்லுங்கள், எங்களுக்கு நல்ல ஆலோசனைகளை கூறுங்கள். மேலும், சிறப்பாக செயல்படு வதற்கு எங்களை நாங்கள் தயார்படுத்தி கொள்கிறோம் என்பதுதான் குற்றம் சொல்ப வர்களுக்கு நாங்கள் விடுக்கும் வேண்டுகோளாகும்.

இவ்வாறு அமைச்சர் பி. கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில் தயாநிதி மாறன் எம்.பி., மேயர் ஆர். பிரியாராஜன், தாயகம்கவிஎம். எல்.ஏ., முன்னாள் எம்.எல்.ஏ கே.எஸ்.ரவிச்சந்திரன், மண்ட லக்குழுத்தலைவர்கள் பி.ஸ்ரீரா முலு, கூ.பீ. ஜெயின், மாமன்ற உறுப்பினர்கள் தமிழ்ச்செல்வி சசிகுமார், வேலு, சுந்தர்ராஜன், சுதாதீனதயாளன், திருமதிபுனி தவதி மற்றும் சுதாகர், பாபு,. முரளி, ராஜசேகர்,. ஜெகதீஷ், பிரபாகரன்,. குறளரசன் ஆகி யோர் கலந்து கொண்டனர்.




சென்னை, தலைமைச் செயலகத்தில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன் முன்னிலையில், "நவீன தமிழ்நாட்டின் சிற்பி கலைஞர் குழுவின் ஆலோசனை கூட்டம் நேற்று (12.12.2023) நடைபெற்றது. இக்குழுக் கூட்டத்தில், குழுவின் உறுப்பினர் செயலர், பொதுப்ப ணித்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் பி.சந்திரமோகன், பொதுப்பணித்துறை முதன் மைத் தலைமைப் பொறியாளர் கே.பி.சத்தியமூர்த்தி, பொதுப்பணித்துறை சிறப்பு அலுவலர் இரா. விஸ்வநாத், குழு உறுப்பினர்கள் ஆர்.சுப்பிரமணியன், திருமதி ரூப்மதி, ஓவியர் மருது, கவிஞர் ஏர்வாடி எஸ்.ராதாகிருஷ்ணன், ஸ்தபதி செல்வநாதன் உட்பட பொதுப்பணித்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மோகனூர் ப.சின்னு

### டிசம்பர் 14 (1995)



திராவிட இயக்கத்தில் பணியாற்றி வந்த இவர், கழகம் துவங்கியவுடன் அதில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.

வட்டப் பிரதிநிதி, துணைச் செயலாளர், கிளைச் செயலாளர், ஒன்றிய துணைச் செயலாளர், ஒன்றியச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்து, மோகனூர் பகுதியில் கழகம் வளரப் பாடுபட்டவர்

சேலம் மாவட்ட அறங்காவலர் குழு தலைவராகவும் – மோகனூர் கூட்டுறவு நிலவள வங்கித் தலைவராகவும் பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த கறுப்புக் கொடி, இலங்கைத் தமிழர், கைலாசம் கமிஷன் எதிர்ப்பு, சட்டநகல் எரிப்பு, இந்தி எதிர்ப்பு போன்ற போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.